Registered as a Newspaper in Ceylon

விலை சதம 10

# ஈழநாடு

EELA NADU

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற்பெட்டி எண்: 4௦

மலர் 6 யாழ்ப்பாணம் சோபகிருது பங்குனி 29 ஆம் நாள் துல்கஃதா 27 (11-4-64 சனிக்கிழமை இதழ் 61

ஈழநாடு
சந்தா விபரம்

இந்தியா — இலங்கை

| | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
|---|---|---|
| 1 வருடம் | 48-00 | 1 -00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 13-00 | 3-25 |

# "தமிழர் பிரச்னையை தீர்க்க பிரதமர் ஆவல்"

## எஸ். ஜே. வி. கூறுகிறார்

## கட்டாய ஓய்வு உத்தரவை வாபஸ் பெறுமாறு கேட்டுள்ளாராம்

யாழ்ப்பாணம், சனி

"பிரதமமந்திரி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தமிழ்பேசும் மக்களின் பிரச்னைகளை தீர்க்க ஆவல் கொண்டிருப்பதாக அறிந்து கொண்டேன். அரசாங்கத்திற்கும் எங்களுக்குமிடையே நடைபெறவிருக்கும் பேச்சுவார்த்தைக்கு இன்னும் நான் குறிக்கப்படவில்லை. இப்பேச்சுவார்த்தையின்போது தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்படும் கட்டாய ஓய்வுபற்றியும் கேட்போம்."

தமிழரசுக்கட்சியின் ஸ்தாபக தலைவர் திரு எஸ். ஜே. செல்வநாயகம் நேற்றுக்காலை தமிழரசுக் கட்சிக் காரியாலயத்தில் 'ஈழநாடு' நிருபருக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பேட்டியின்போது திரு செல்வநாயகம் கூறியதாவது:

அரசாங்கத்திற்கும் எங்களுக்குமிடையே மொழிப்பேச்சுவார்த்தை நடைபெறுமென எதிர்பார்க்கிறோம். தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள கட்டாயஓய்வு நோட்டீஸை வாபஸ் பெறும்படி பிரதமமந்திரியிடம் கேட்டுள்ளோம்.

**கேள்வி:** இந்நாட்டில் சர்வாதிகார ஆட்சியொன்று ஏற்பட்டால் தமிழ்பேசும் மக்களின் பிரச்னைகள் தீர்க்கப்படுமா?

**பதில்:** சர்வாதிகார ஆட்சி நடத்துவோர் எப்படிப்பட்டவர்கள் என்று அறியாமல் இதைப்பற்றிக் கூறமுடியாது.

**கேள்வி:** இந்த அரசாங்கம் தனது ஆட்சிக் காலத்திற்குள் மொழிப் பிரச்னையைத் தீர்க்குமா?

**பதில்:** இன்னும் ஓர் வருட காலததிற்குள் அரசாங்கம் கலைக்கப்படாவிட்டால்மொழிப்

(6-ம பக்கம் பார்க்க)

## 'மொழிப்பிரச்னையை விரைவில் தீர்த்துவைக்குக'

### பிரதமருக்கு யாழ். மாநகரசபை வேண்டுகோள்

யாழ்ப்பாணம், சனி

மொழிப் பிரச்னையை விரைவில் தீர்த்துவைக்கும்படி பிரதமமந்திரி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம், நேற்று மாலை திரு. ரி. எஸ். துரைராஜா தலைமையில் நடைபெற்ற மாநகரசபைக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறியது. இத் தீர்மானத்தை என்ன மொழியில் பிரதமருக்கு அனுப்புவதென திரு. இராஜசூரியர் கேட்டபொழுது, மேயர் திரு. ரி. எஸ். துரை

(6-ம் பக்கம் பார்க்க)

## இந்துசமுத்திரத்தில் அமெரிக்க 7-வது அணி

வாஷிங்டன், ஏப். 10

அமெரிக்க கடற்படையின் 7-வது அணி இந்து சமுத்திரத்துக்கு வந்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அணியில் ஒரு விமானம்தாங்கிக் கப்பல் 3 நாசகாரிக்கப்பல் ஒரு எண்ணைதாங்கிக் கப்பல் இருப்பதாகவும் இந்த அணியின் நடமாட்டம் இந்துசமுத்திரத்தில் ஆறு வாரங்களுக்கு இருக்குமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது ஒரு நல்லெண்ண விஜயம் எனக் கருதப்பட வேண்டுமென அமெரிக்கா தெரிவித்துள்ளது.

## பிரிட்டிஷ் தேர்தல் அக்டோபரில் நடைபெறும்

லண்டன், ஏப். 10

பிரிட்டனின் பொதுத் தேர்தல் இலையுதிர் காலத்தில் நடைபெறுமென்று பிரிட்டிஷ் பிரதமர் சர் அலெக்ஸ் டக்ளஸ் ஹியூம் அறிவித்துள்ளார்

தற்போதைய பிரிட்டிஷ் அரசாங்கத்தின் ஐந்து வருட பதவி காலம் இவ்வருடம் நவம்பர் மாதம் 5ம் திகதியுடன் முடிவடைவதால், அடுத்த பொதுத் தேர்தல் அநேகமாக அக்டோபர் மாதத்தில் நடைபெறலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஜாகர்த்தா, ஏப். 10

ஜாகர்த்தாவில் இன்று ஆரம்பமான ஆசிய—ஆபிரிக்க ஆயத்த மகாநாட்டில் இந்தோனேஷிய வெளியுறவு மந்திரி டாக்டர் சுபந்திரியோ தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## ஈடு மீட்பதற்கு மக்கள் வங்கி கடனுதவி அளிக்கும்

கொழும்பு, வெள்ளி

ஈடுவைத்த காணிகளைத் திருப்பிப்பெறக்கூடிய வகையில் மக்கள் வங்கி பொதுமக்களுக்கு விரைவில் கடன்வசதியளிக்கவிருக்கிறது.

1956-ம் ஆண்டுவரை ஈடு வைக்கப்பட்ட காணிகளுக்கு இத் திட்டத்தின்படி ரூ. 15,000 வரையான கடன் வழங்கப்படவிருக்கிறது.

மக்கள் வங்கி, ஈட்டை மீண்டு ஈடுவைத்தவரிடம் காணியை ஒப்படைத்து பின்னர் ஈடு மீட்பதற்காகக் கொடுக்கப்பட்ட தொகையை தவணை முறையில் குறிப்பிட்டவரிடமிருந்து பெற்றுக்கொள்ளுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வருமானம் குறைந்த வகுப்பினருக்கு இத் திட்டம் மிக்க உதவியளிப்பதாக இருக்குமென நிதிமந்திரி திரு. டி. பி. இலங்கரத்தின கருத்துத் தெரிவித்துள்ளார்.

## பசுக்களை இறைச்சிக்கு வெட்ட அனுமதிப்பதில்லை

### யாழ்ப்பாணம் மாநகரசபைக் கூட்டத்தில் ஏகமனதாக முடிவு

யாழ்ப்பாணம், சனி

பசுமாடுகளை இறைச்சிக்கு வெட்ட அனுமதிப்பதில்லையென்றும், கள்ளத்தனமாக பசுமாடுகளை இறைச்சிக்கு வெட்டுவோர்களின் லைசென்சுகளை ரத்துச் செய்வதென்றும் நேற்றுமாலை மேயர் திரு. ரி. எஸ். துரைராசா தலைமையில் நடந்த யாழ்ப்பாணம் மாநகரசபைக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

சாதாரணமாக எல்லாப் பிரதேசங்களிலும் பசுமாடு இறைச்சிக்காக வெட்டுவது இப்போது சர்வசாதாரண விஷயமாகி விட்டபடியால் இதைத் தடுப்பது கூடாதென்ற சுகாதார குழுவின் அபிப்பிராயம் சபையில் விவாவத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதுபற்றி கந்தர்மட வட்டார அங்கத்தவர் திரு. எஸ். நாகராசா பேசும்போது கூறியதாவது:-

பசு சைவ மக்களுக்கு ஒரு தெய்வம் போன்றது. அதை அவர்கள் கடவுளாக மதித்து வழிபட்டு வருகிறார்கள். பசுவை சிவபெருமானுடன் நெருங்கிய தொடர்பு படுத்தியிருக்கிறார்கள். ஆதலால் பசுமாடுகளை இறைச்சிக்கு வெட்ட அனுமதிப்பது தமிழ் மக்களுக்கு இழுக்கானது. மற்றச் சமயத்தவர்களும் இதனை எதிர்

(6-ம் பக்கம் பார்க்க)

உங்கள் கட்டிடங்கள்
உறுதியாக இருப்பதற்கு
திறமான
★ இரும்புச் சாமான்களும்
★ பெயின்டுவகைகளும்
★ அஸ்பஸ் சீட்டுகளும்
★ மர வகைகளும்
எம்மிடம்
பெற்றுக் கொள்ளலாம்
விஷ்ணு
ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
வல்வெட்டித்துறை

ஸ்ரீ மனோஹராவின்
மகத்தான திறப்பு விழா!
திரு வி. இராமநாதன் அவர்கள்
(ஏ. வி. ஆர். ஏ. ஸ்தாபன உரிமையாளர்)
புதுவருட தினத்தன்று (13-4-64) திங்கட்கிழமை பிற்பகல் 1-00 மணியளவில் திறந்துவைப்பார்.
★ நாகேஸ்வரராவ்
★ நடிகையர் திலகம் சாவித்திரி ★ நாகையா
ஆகியோரின் திறமைமிக்க நடிப்பில் உருவாகிய
★ அனுராதா ★
என்னும் சிறந்த தமிழ்ச்சித்திரத்துடன் காட்சி ஆரம்பிக்கப்படுகிறது
முக்கிய கவனிப்பு
ஒலி, ஒளி கருவிகள் (WESTREX) வெஸ்ரெக்ஸ் ஸ்தாபன நிபுணர்களால் புதுப்பிக்கப்பட்டு சிறப்புற்றிருப்பதை நேயர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறிவிக்கின்றோம்.

## அறிவித்தல்

தமிழ்-சிங்கள புதுவருடப் பிறப்பை முன்னிட்டு 13-4-64 திங்கட்கிழமை "ஈழநாடு" காரியாலய ஊழியர்களுக்கு விடுமுறையாதலால் 14-4-64 செவ்வாய்க்கிழமைமட்டும் "ஈழநாடு" வெளிவரமாட்டாது.

### மணிவாக்கு

மனிதர் தம்சுயநலத்தை ஒழிக்க முடிந்தாலே, சுதந்திரத்தைப் பாதுகாக்க முடியும். குழப்பமான இவ்வுலகிலே இப்போது அதிகம் வேண்டியது மனித சகோதரத்வம், அன்பு, கருணை இவைகளே.

— ரிச்சர்ட்பெர்ட்

ஈழநாடு

EELA NADU

EELA NADU National Tamil Dail, Post Box 49, Jaffna
Telegram. EELA NADU Jaffna
Phone 389

பங்குனி ௴ 29 ௳ (11-4-64)

## நமது பொருளாதாரப் பிரச்னை

இலங்கையிலிருந்து நாம் வெளிநாடுகளுக்கு அதிக தேயிலை முதலியவற்றை ஏற்றுமதி செய்தாலும் அதன் விலை மதிப்பு குறைகிறதாம். நாம் இறக்குமதி செய்யும் பொருள்களின் விலைமதிப்பு அதிகரிக்கிறதாக யாழ்ப்பாண முற்றவெளியில் நடைபெற்றபொதுக் கூட்டத்தில் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா தெரிவித்தார். பிரதமரும் சமீபத்தில் ஒருபொதுக் கூட்டத்தில் பேசுகையில் இதே புகார்கூறினார். இதுநமது தேசிய நன்மையைப் பாதிக்கும் விஷயமாதலால் எல்லாக் கட்சியினரும் கவனம் செலுத்தி இதற்குத் தக்க பரிகாரம் தேட வேண்டியது அவசியமாகும்.

வெளிநாட்டுச் செலாவணியை நாம் அதிகமாகப் பெற வேண்டுமென்றும் இதற்காக நமது ஏற்றுமதிகளை அதிகரித்து, இறக்குமதியைக் குறைக்க வேண்டுமென்றும் பொதுவாகச் சொல்லப்படுவதுடன், இதே கொள்கையை அரசாங்கமும் கைக்கொண்டு வருகின்றது. தேயிலை, ரப்பர் முதலியவற்றின் உற்பத்தியைப் பெருக்கி ஏற்றுமதியை அதிகரித்தாலும், வெளிநாடுகள் அவற்றின் விலைமதிப்பைக் குறைப்பதால் நமக்கு வெளிநாட்டுச் செலாவணி குறைவாகவே கிடைக்கிறது. இதேசமயம் நாம் இறக்குமதி செய்யும் அத்தியாவசிய உணவு, உடைப் பொருள்களின் விலை மதிப்பை வெளிநாடுகள் அதிகரித்திருப்பதால் குறைந்த அளவு பொருள்களுக்கு அதிக பணம் கொடுக்க வேண்டியுள்ளது. இதேசமயம் இறக்குமதிக் கட்டுப்பாட்டினால் நமது கைத்தொழில்களும் பாதிக்கப்படுவதாக பலத்த புகார்கள் எழுகின்றன. இந்த எக்கச்சக்கமான பொருளாதார நிலைக்கு என்ன பரிகாரம்? இது மிக முக்கியமான பிரச்னை.

ஜெனிவாவிலே இப்போது நடைபெறும் 121 தேசங்களின் உலக வர்த்தக மகாநாடு இதற்கு ஏதும் உதவி செய்யுமா? 'மான்செஸ்டர் கார்டியன்' பத்திரிகைகூட சிலநாட்களுக்குமுன் எழுதியுள்ள ஒரு தலையங்கத்தில் தொழில் முன்னேற்றமடைந்துள்ள நாடுகள் பின்தங்கிய நாடுகள் விஷயமாக அதிக தாராளமனப்பான்மை காட்டி தியாகம் செய்ய வேண்டுமென்றும், அங்கு பொதுமக்கள் மிகவும் சங்கடப்படுகிறார்களென்றும் வற்புறுத்தி எழுதியுள்ளது. தொழில் முன்னேற்றமடைந்துள்ள நாடுகள் அவ்விதம் நமக்காகத் தியாகம் செய்து, நமது பொருள்களை அதிக அல்லது நியாயமான விலை கொடுத்து வாங்கிக் கொண்டு தங்கள் பொருள்களைக் குறைந்த விலைக்குக் கொடுப்பதாயின் அது பெரிதும் நன்றியுடன் வரவேற்கத் தக்கதே. ஆனால் அவை அப்படிச்செய்யுமென்று நாம் நம்பி இருக்க முடியாது. இங்குள்ள நிலையை மாற்ற நாம் என்ன செய்ய வேண்டுமென்பதே கேள்வி.

இங்கு எண்ணெய்க் கம்பெனிகளின் சொத்துக்களை எடுத்துக் கொண்டு, அவற்றுக்கு இன்னும் நஷ்டஈடு தராததால், உலகில் மிகவும் செல்வாக்குள்ள அக்கம்பெனிகள் மனக்கசப்படைந்துள்ளன. இதனால் நமக்குக் கூடுமான பாதகங்களை அவை மறைமுகமாகச் செய்யுமாயின் அதில் வியப்பில்லை. இதேசமயம் இங்கு பணவீக்கமேற்பட்டு நமது ரூபாயின் மதிப்பு உலக மார்க்கெட்டிலே மிகவும்குறைந்துள்ளது. மேலும் இங்குலஞ்ச ஊழல்களும், வேலைநிறுத்தங்களும் அதிகரித்துள்ளதும் இன்றைய அவலநிலைக்கு முக்கியமான காரணங்கள். இவற்றைத் தீர்த்து நாம் முன்னேறுவதென்பது சாதாரண காரியமல்ல. இதற்கு நாட்டிலுள்ள எல்லா தேசாபிமான சக்திகளின் ஒத்துழைப்பும் மிகவும் அவசியமாகும். அவ்வித ஒத்துழைப்பின்மூலம் மேலான பொருளாதாரத்திட்டம் அமைத்து அதன்படி காரியங்கள் செய்தாலே விமோசனத்துக்கு வழிபிறக்கக்கூடும்.

ஆனால் துரதிருஷ்டவசமாக இங்குபல அரசியல் கட்சிகளும் தலைவர்களும் வலது, இடது என்று சொல்லிக்கொண்டு அடுத்த தேர்தலில் எப்படி வெற்றிபெற்று அதிகாரத்துக்கு வரலாமென்று சுயநல கட்சி நோக்கங்களையே கொண்டுள்ளன. தேசமக்களின் நன்மைக்காக கட்சியின் நன்மைகளைத் தியாகம் செய்ய யாரும் முன்வருவதாகத்தெரியவில்லை. நாட்டில் சுயநலம்தான் அதிகமாக இருக்கின்றதேயன்றி தியாக எண்ணங்கள் மிகவும் குறைவாகவுள்ளன. நாம் இங்கு சுயதேவையைப் பூர்த்தி செய்யக்கூடியதான தொழில்களுக்கே முக்கிய இடம் தருவதுடன், தியாகபுத்தியுடன் பலரும் ஒத்துழைக்க முடிந்தாலே இன்றைய தேசியப் பிரச்னை ஓரளவாவது தீர வழிபிறக்கும். ஆனால் அவ்வித உணர்ச்சி நமது அரசியல்வாதிகளிடையே மட்டுமன்றி மக்களிடையேயும் இல்லாதது மிகவும் [illegible]

## இறக்குமதி கோட்டா குறைக்கப்படும்

கொழும்பு, வெள்ளி

இறக்குமதி கோட்டாக்களில் அதிகமான வெட்டுவிழுந்திருப்பதால் தனிப்பட்ட கைத்தொழில்கள் பாதிக்கப்பட்டிருப்பதுடன் வர்த்தக, கைத்தொழில் ஸ்தாபனங்களில் வேலைபார்க்கும் ஊழியர்கள் குறைக்கப்படலாம் என்றும் தெரியவருகிறது.

இந்த வருட இறக்குமதிகளுக்காகச் செலவிடப்படும் வெளி நாட்டுச் செலாவணி சம்பந்தமாக அரசாங்கம் செய்துள்ள புதிய முடிவே இதற்குக்காரணமாகும்.

## குரோதி வருஷ வாக்கியபஞ்சாங்கம்

யாழ்ப்பாணம் கொக்குவில் இ. கி. இரகுநாதையரால்கணிக்கப்பெற்ற குரோதி வருஷ வாக்கிய பஞ்சாங்கம் 107-ம் வருஷப் பதிப்பாக வெளிவந்திருக்கிறது. பக்கங்கள் 96. விலை ரூ. 1-50.

குரோதி வருஷ பலனைக் கூறி வருஷப்பிறப்பில் செய்ய வேண்டிய கருமங்களை எடுத்துக் கூறும் இப்பஞ்சாங்கம் பல்லி சொற்பலன், பல்லி விழும் பலன், கிரகசாரமாத பலன், மாதகோசாரபலன், ஆகியவைகளையும் தேவாலய சங்காபிஷேகம், அலங்கார உற்சவங்கள், அபிஷேக தினங்கள், பொங்கல் தினங்கள் விசேஷ உற்சவ தினங்கள், நாயன்மார் குருபூஜை திருநாள், ஆழ்வாராதியார் திருநாள்களையும் தருகின்றது.

தானியங்கள் விதைத்தல், கத்தரி, மிளகாய், தக்காளி நடுதல், வாழை, கரும்பு நடுதல், புதிரெடுத்தல், தானியஞ்சேர்த்து வைத்தல், வியாபாரஞ்செய்தல், புதுக்கணக்குப் பதிதல், கிணறு, குளம் தோண்டல், பிரயாணம் செய்தல், அன்னப்பிராசனம், வீடு கட்டுதல், குடிபுகுதல் ஆகியவற்றுக்கான சுபநேரங்களையும இப்பஞ்சாங்கம் வழமைபோல் தெரிவிக்கின்றது. இந்துக் குடும்பங்களுக்கு மிகவும் உபயோகமானது.

— "தேனீ"

(5-ம் கலத் தொடர்ச்சி)

திருநெல்வேலியிலே பொலிஸ் அதிகாரியின் உபசாரத்துக்காக வாசிப்பதற்குப் போயிருந்தாராம். கச்சேரிக்கு முன் கலெக்டருடன் பேசிக்கொண்டிருக்கும்போது மயக்கமாக விழுந்துவிட்டாராம். அப்பால் பிரக்ஞை திரும்பவில்லை. உடனே ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். இரண்டு நாள் நல்ல சிகிச்சை செய்தும் பயனில்லை. பின்னர் அவரது சடலம் கோவில்பட்டியிலுள்ள அவரது இல்லத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

அவருக்கு மூன்று மனைவிகளாம். குழந்தைகள் உள்ளன. வயது 43 தான். பாவம்!

* * *

அவரது மறைவைப் பற்றி சென்னையின் முன்னாள் பிரதம நீதிபதி டாக்டர் ராஜமன்னர், பேராசிரியர் சாம்பமூர்த்தி, மதுரைமணி, ஜி. என். பி., வசந்தகுமாரி, சிவாஜி கணேசன் முதலியவர்கள், பெரிதும் வருந்தி, "கலை உலகுக்கு ஈடுசெய்யமுடியாத நஷ்டம்" என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள்.

* * *

ஈழத்திலே, அவர் மறைவைப் பற்றி யாருக்கு அதிக துக்கம் இருக்கும் தெரியுமா? கப்பித்தாவத்தை பிள்ளையார் கோயில் குருக்களுக்குத்தான். அவரது உற்ற நண்பர் அவர். அக்குருக்களுக்காகவே அவர் கொழும்புக்கு இருமுறை வந்து கச்சேரி செய்துள்ளாராம்! சென்ற வாரம்தான் அந்தக் குருக்கள் காருகுறிச்சியாரைப் பற்றிப் பெருமையுடன் என்னிடம் சொன்னார்! என்ன செய்யலாம்!

நாகசுரமா? நாதசுரமா? இதில் எது சரி? இதுபற்றி முன்னர் பத்திரிகைகளில் விவாதம் நடந்தது. சமீபத்தில் தஞ்சாவூர் சங்கீத மகாலிலுள்ள வாத்திய கண்காட்சிக்குச் சென்றிருந்தேன். அங்கு இருந்த நிபுணர், 'நாகசுரம்' தான் சரி என்று கூறி, பாம்புபோல் உலோகத்தில் செய்திருந்த பழைய நாகசுரத்தைக் காண்பித்தார். அந்தக் காட்சியிலே எவ்வளவோ சங்கீதக் கருவிகளை வைத்துள்ளனர். முடிந்தால் அவசியம் போய்ப் பாருங்கள்.

புலன்கள் ஐந்தால் ஆட்டுண்டு போது நோக்கிப் புறம்புறமே திரியாதே போது நெஞ்சே, சலங்கொள் சடைமுடியாய் தேவா என்றுந் தக்கன்செய் பெருவேள்வி தகர்த்தாயென்றும், இலங்கையர் கோன்சிரம் நெரித்த இறைவா என்றும் எழிலாரிடங் கொண்ட எந்தாயென்றும், நலங்கொளடியென் தலைமேல் வைத்தாயென்றும் நாடோறும் நவின்றேத்தாய் நன்மையாமே.

—திருநாவுக்கரசர்

## சுவீப் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி

நேற்று இழுக்கப்பட்ட கைத்தொழில் சுவீப் முடிவுகள் வருமாறு:-

முதலாவது பரிசு
15 W 0578 ரூ. 20,000

இரண்டாவது பரிசு
11 P 0927 ரூ 7,750

மூன்ருவது பரிசு
15 C 0852 ரூ. 3,880

ரூபா 500-00 பரிசுபெறும் டிக்கட்டுகள் விபரம் வருமாறு:

| | |
|---|---|
| 17 C 0831 | 17 P 0641 |
| 11 N 0774 | 12 C 0015 |
| 12 W 0906 | 08 T 0343 |
| 05 X 0727 | 03 D 0438 |
| 19 F 0070 | 06 J 0784 |
| 04 W 0326 | 09 P 0560 |
| 05 U 0811 | 04 J 0229 |
| 10 E 0377 | 13 L 0195 |
| 05 Q 0684 | 19 B 0092 |
| 12 J 0478 | 03 F 0480 |
| 04 T 0868 | 09 Q 0111 |
| 03 S 0899 | 11 U 0903 |
| 14 P 0906 | 18 Z 0958 |
| 17 J 0724 | 11 D 0764 |
| 01 E 0023 | 06 B 0584 |
| 07 G 0915 | 06 H 0278 |
| 15 X 0859 | 11 Z 0882 |
| 11 W 0727 | 08 G 0532 |
| 12 W 0893 | 11 J 0390 |
| 10 J 0323 | 14 W 0644 |
| 17 E 0189 | 11 I 0374 |
| 09 G 0203 | 12 U 0010 |
| 11 H 0142 | 18 L 0768 |
| 01 D 0571 | 04 G 0279 |
| 09 L 0637 | 19 J 0113 |
| 14 T 0231 | 19 D 0120 |
| 18 Q 0199 | 17 D 0625 |
| 17 D 0860 | 11 U 0535 |
| 12 I 0381 | 11 T 0358 |
| 01 R 0389 | 15 J 0051 |
| 18 N 0184 | 14 V 0909 |
| 12 C 0985 | 13 D 0666 |
| 12 G 0607 | 09 A 0632 |
| 09 Z 0535 | 01 N 0504 |
| 08 Z 0931 | 11 Y 0211 |
| 09 T 0473 | 17 P 0175 |
| 08 A 0586 | 07 D 0401 |
| 01 F 0449 | 15 G 0834 |
| 19 Q 0132 | 11 U 0371 |
| 11 T 0254 | 18 J 0962 |
| 06 H 0438 | 11 H 0505 |
| 11 K 0330 | 02 L 0472 |
| 09 S 0170 | 08 S 0300 |
| 10 Q 0280 | 14 Z 0025 |
| 08 J 0693 | 12 V 0504 |
| 10 F 0001 | 13 L 0075 |
| 15 Y 0148 | 11 N 0252 |
| 02 G 0553 | 09 V 0319 |
| 13 F 0428 | 03 E 0787 |
| 16 N 0036 | 03 Z 0614 |

தலா ரூபா 250-00 பரிசு பெறும் டிக்கட்டுகள் வருமாறு:

| | |
|---|---|
| 15 A 0578 | 15 M 0578 |
| 15 B 0578 | 15 N 0578 |
| 15 C 0578 | 15 P 0578 |
| 15 D 0578 | 15 Q 0578 |
| 15 E 0578 | 15 R 0578 |
| 15 F 0578 | 15 S 0578 |
| 15 G 0578 | 15 T 0578 |
| 15 H 0578 | 15 U 0578 |
| 15 I 0578 | 15 V 0578 |
| 15 J 0578 | 15 X 0578 |
| 15 K 0578 | 15 Y 0578 |
| 15 L 0578 | 15 Z 0578 |

## அச்சுக்கடுதாசி தட்டுப்பாடு

கொழும்பு, வெள்ளி

அச்சுக்கடுதாசிகளின் விநியோகம் மிகவும் மோசமாகவுள்ளதென்றும் சிலவியாபாரிகள் அச்சுக்கடுதாசிகளை கூடுதலான விலைக்கு விற்றுமோசடி செய்கிறார்களென்றும் அகில இலங்கை அச்சுத்தொழிலாளர் சங்கத்தினர் வர்த்தக மந்திரிக்கு அனுப்பியுள்ள தந்தியில் தெரிவித்துள்ளனர்.

அத்தந்தியில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: "14 ரூபாவுக்கு இறக்குமதி செய்யப்படும் ஒரு 'ரீம்' அச்சுக்கடுதாசியை சில வியாபாரிகள் ரூபா 35 முதல் 40 வரை விற்பனை செய்கிறார்கள்."

## ஐயாறன் எழுதுவது

ஒரு கதை கேள்விப்பட்டேன். இலங்கையிலிருந்து ஓரன்பர் பாங்காக்குக்குச் சென்றாராம், அங்கிருந்து தான் நமக்குப் புளி வருகிறது. ரூத்தல் புளி அங்கு என்ன விலையாம் தெரியுமா? 26 சதம். மொத்தமாக வாங்கினால் 22 சதம் தானாம். இதைக் கேட்டதும் அவர் பாங்காக்கிலே ஒரு 5 டாலர் போட்டு வங்கிக்கணக்கு ஆரம்பித்து, அங்கு ஒரு புளி வியாபாரியிடம் தொடர்பு கொண்டு, தமக்குக் கமிஷனுக்கு ஏற்பாடுசெய்துகொண்டாராம்.

இலங்கைக்குத் திரும்பியதும் இங்கு சம்பந்தப்பட்ட ஓர் அதிகாரியிடம் 'சம்திங்' கொடுப்பதாகப் பேசி, தனது நண்பரான பாங்காக் வியாபாரி மூலம் புளியைக் கூடுதல் விலைக்கு இறக்குமதி செய்து மிச்சத்தை கமிஷனாகத் தன் பெயருக்கு பாங்காக் வங்கியில் போடுமாறு ஒழுங்குசெய்துவிட்டாராம்.

இந்த ஒரு வியாபாரத்தில் மட்டும் அவர் கணக்கிலே பாங்காக்கில் இருபதாயிரம் ரூபாய்க்கு மேல் சேர்ந்துவிட்டதாம். இந்த இருபதாயிரமும், இப்போதுள்ள 'பீனுமாவன்னு' ரேட்டின்படி அறுபதாயிரமாகும்! அவர் இப்போது திடீரென ஒரு 'புளிப்பிரபு' ஆகிவிட்டார். இப்போதுள்ள வர்த்தக கட்டுப்பாடுகளின் பயனாக, புதிதுபுதிதாக எவ்வளவோ 'பிரபுக்கள்' நம்மிடை தோன்றுகிறார்கள். அதிர்ஷ்டக்காரர்கள்.

* * *

நாகசுரச் சக்கரவர்த்தியின் திடீர்மறைவைக் கேட்டு, இங்கு பலரும் திடுக்கிட்டுப் பெரிதும் வருந்துகின்றார்கள். அவரைப் பற்றி உரும்பராயிலிருந்து ஓரன்பர் எழுதுவதாவது:

கோடானுகோடி உள்ளங்களையெல்லாம் இசையாலே கவர்ந்த நாகசுரமேதை காருகுறிச்சி கே. பி. அருணாசலத்தார். அவரைப் பற்றி ஐயாறனில் விளக்கமாக எழுதும்படி வேண்டுகிறேன். காருகுறிச்சியார் ஈடும்எடுப்புமில்லாத இசைமய ஜோதி. அவருக்கு நிகர் அவரே. அவர் மறைவு கர்நாடக சங்கீதத்துறைக்கு மட்டுமல்ல, உலகுக்கே பெருநஷ்டம். சங்கீத மேதைகளான இராசரத்தினம்பிள்ளை, வேதமூர்த்திப்பிள்ளை, தியாகராசபாகவதர், வசந்தகோகிலம், எஸ். ஜி. கிட்டப்பா முதலிய வித்வான்களும் இளமையிலேயே நம்மை விட்டுப் பிரிந்தமை நாம் செய்த தவக்குறைவே".

இங்குள்ள கலை அன்பர்களின் உணர்ச்சியை அப்படியே எடுத்துக்கூறிவிட்டார் அன்பர். 'லாவண்யம்' அவர்கள் நேற்று இதே விஷயமாக எழுதியிருந்ததை அன்பர்கள் படித்திருக்கலாம்.

வெள்ளவத்தையிலே ஆடிவேலின்போது சம்மாங்கோட்டு பிள்ளையார் கோயில் காருகுறிச்சியாரின் இன்னிசையை நேரில் கேட்க அடேயப்பா எவ்வளவு பெரிய கூட்டம் தெரியுமா? கொழும்பிலே தமிழ்மக்களுக்கு அப்போது பெரிய சோதனைக் காலம். இருந்தாலும், அவ்வளவு பெருந்திரளான மக்கள் இந்த இசையைப் பருகக் கூடியிருந்ததைப் பார்த்ததும், தமிழருக்கு எவ்வளவு கலை ஆர்வம உள்ளதென்பதையும் காருகுறிச்சியாரிடம் அவர்களுக்கு எவ்வளவு அபிமானம் உள்ளதென்பதையும் உணர முடிந்தது.

* * *

அவர் மரணம் எப்படி ஏற்பட்டது என்ற விவரங்களை அறிய ஆவலுடன் சென்னைப் பத்திரிகைகளைப் பார்த்தேன்.

(3-ம் கலம் பார்க்க)

# நேரு-லியாகத் ஒப்பந்தம் புதுப்பிக்கும் யோசனைக்கு பாகிஸ்தான் இணங்கவில்லை

புதுடில்லி, ஏப். 10

**இந்திய-பாகிஸ்தான் உள்துறை மந்திரிகளின் பேச்சுகள் தற்பொழுது முக்கிய கட்டத்தை அடைந்திருப்பதாக பார்வையாளர்கள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர். நேற்றுடன் முடிவடைவதாகவிருந்த உள்துறை மந்திரிகளின் மகாநாடு எப்பொழுது முடிவடைய வேண்டுமென்று இன்னும் தீர்மானிக்கப்படவில்லை. இருநாட்டு உள்துறை மந்திரிகளும் இன்று காலை மீண்டும் சந்தித்துப் பேச்சுகள் நடத்தினர்கள். இந்திய-பாகிஸ்தானில் வகுப்பு ஒற்றுமையை நிலைநாட்ட இரு பிரதிநிதிகளும் முழு முயற்சியெடுத்து வருவதாகக் கருதப்படுகிறது.**

இந்திய உள்துறை மந்திரி திரு. குல்சாரிலால் நந்தாவும் பாகிஸ்தான் உள்துறை மந்திரி திரு. ஹபிபுல்லாகானும் நேற்று சில முக்கிய பிரச்னைகள் குறித்து பேச்சுகள் நடத்தினர்கள். இந்தப் பேச்சுகளின்போது சில இந்திய உயர்தர அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

1950-ம் ஆண்டில் நேருவும் லியாகத் அலிகானும் செய்து கொண்ட ஒப்பந்தத்தைப் புதுப்பிக்க வேண்டுமென்று இந்திய உள்துறைமந்திரி திரு. குல்சாரிலால்நந்தா தெரிவித்திருந்த யோசனைக்கு பாகிஸ்தான் பிரதிநிதிகள் இணக்கம் தெரிவிக்கவில்லையெனத் தெரிய வருகிறது.

இந்த ஒப்பந்தத்தைச் செய்து கொண்டதன்மூலம், ஐந்து வருடகாலத்துக்கு இருநாடுகளிலும் வகுப்பு ஒற்றுமை நிலவியதென்றும் இவ் ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட வேண்டுமென்றும் திரு. குல்சாரிலால்நந்தா வற்புறுத்திக் கூறியபொழுதிலும் இந்த யோசனையை பாக். உள்துறை மந்திரி திரு ஹபிபுல்லாகான் ஏற்றுக் கொள்ளவில்லையென்று கூறப்படுகிறது.

வகுப்பு ஒற்றுமை குறித்து திரு. நந்தா தெரிவித்திருந்த பல யோசனைகளை பாகிஸ்தான் ஏற்றுக் கொண்டுள்ளது. ஆனால் சில யோசனைகளை பாகிஸ்தான் பிரதிநிதிகள் முழுவதுமாக ஏற்றுக் கொள்ளவில்லையென்று கூறப்படுகிறது.

உள்துறை மந்திரிகளின் மகாநாடு இன்றுகாலை தொடர்ந்து நடைபெற்றது. மகாநாடு எப்பொழுது முடிவடையுமென்று இன்னும் தெரிவிக்கப்படவில்லை.

## ஹஸ்ரத்பால் வழக்கு வாபஸானது

ஸ்ரீநகர், ஏப். 9

ஹஸ்ரத்பால் கொலை இனக்கலவர வழக்கையும் ஸ்ரீநகர் எதிருண்டு வழக்கையும் காஷ்மீர் அரசாங்கம் வாபஸ் பெற்றுள்ளது. ஸ்ரீநகர் மாவட்ட மாஜிஸ்டிரேட்டினால் சமர்ப்பிக்கப்பட்ட ஒரு விண்ணப்பத்தை அடிஷனல் செஷன்ஸ் நீதிபதி திரு நிரஞ்சன்சிங் ஏற்றுக் கொண்டதைத் தொடர்ந்து இவ்வழக்குகள் வாபஸ் பெறப்பட்டுள்ளன.

ஹஸ்ரத்பால் வழக்கில் மொஹிதீன் ஹம்தானி, குலாம் ரசூல், காரா,யாகூப் பெக ஆகியோர் உட்பட 58 எதிரிகள் உண்டு. எதிருண்டு வழக்கில் 9 எதிரிகள் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. இரு வழக்குகளிலும் சம்பந்தப்பட்ட எதிரிகள் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தனர்.

பல்வேறு சமூகத்தினரிடையே ஒற்றுமையையும் நல்லெண்ணத்தையும் வளர்க்கும் பொருட்டே இவ்வழக்கு வாபஸ் பெறப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

## பிரிட்டன் மீது ஐ. நா. கண்டனம்

### யேமன் கோட்டையை தாக்கியதற்கு!

நியூயோர்க், ஏப். 10

கடந்த மாதம் யேமனில் பிரிட்டிஷ் விமானங்கள் தாக்கியதை ஐக்கிய நாடுகள் பந்தோபஸ்து சபை கண்டித்துள்ளது.

கடந்த மார்ச் மாதம் யேமனில் ஹரீப் கோட்டைமீது பிரிட்டிஷ் விமானங்கள் குண்டுகளை வீசியதில், ஹரீப் கோட்டை தவிடுபொடியானதுடன் 25 பேர் கொல்லப்பட்டனர்.

பிரிட்டிஷ் விமானங்களின் இத்தாக்குதலை கண்டித்து, 9 நாடுகள் கொண்டுவந்த தீர்மானம் ஒன்றை ஐ. நா. பந்தோபஸ்துசபையில் மொரோக்கோவும் ஐவரிகோஸ்ட்டும் தாக்கல் செய்திருந்தன. தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டபொழுது ஒன்பது நாடுகள் இத்தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்திருந்தன. அமெரிக்காவும் பிரிட்டனும் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

யேமன் கோட்டைமீது பிரிட்டிஷ் விமானங்கள் தாக்கியதைக் கண்டனம் செய்த ஐ. நா. பந்தோபஸ்து சபை, யேமனில் அசம்பாவிதமான சம்பவங்களெதுவும் நிகழா வண்ணம் இரு நாடுகளும் கவனித்துக் கொள்ளவேண்டும் என்றும் கேட்டுள்ளது.

# பாக்-இந்தியா எதிர்காலம்பற்றி ஷேக் அப்துல்லா கருத்து

ஜம்மு, ஏப். 10

ஜம்முவில் நேற்று நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில் திரு. ஷேக் அப்துல்லா பேசுகையில்; இந்திய-பாகிஸ்தானின் எதிர்காலம் வகுப்பு ஒற்றுமையில் தான் தங்கியிருக்கிறது என்று கூறினர்.

"காஷ்மீர் பிரச்னை சம்பந்தமாக இப்பொழுது எந்தவித யோசனையும் என்னால் கூற முடியாது. ஆனால் இந்தப் பிரச்னையைச் சுமுகமாகத் தீர்த்து இந்திய-பாகிஸ்தானில் நல்லுறவு ஏற்படுத்த நான் முயற்சிகள் எடுப்பேன்" என்றும் திரு. ஷேக் அப்துல்லா கூறினர்.

"காஷ்மீர் பிரச்னை இந்திய-பாகிஸ்தான் உடலில் உள்ள ஒரு புற்றுநோய் போன்றது. நன்கு வளர்ச்சியடைந்த இந்த நோயை அகற்றுவதற்கு சரியான முறையில், விரைவாக 'சிகிச்சை' செய்ய வேண்டும். இந்தப் பிரச்னையைத் தீர்க்க யுத்தம் அல்லது சமாதானம் தான் சிறந்தது. யுத்தத்தை காஷ்மீர் மக்கள் விரும்பவில்லை. ஆகையினால் சமாதான வழிகள் மூலம் இப்பிரச்னையைத் தீர்க்க வேண்டும்" என்றும் திரு. ஷேக் அப்துல்லா கூறினர்.

# நிர்வாக கமிட்டி கூட்டத்திலிருந்து 12 பேர் வெளி நடப்பு

## காரியதரிசி பதவியிலிருந்து பூபேஷ்குப்தா ராஜிநுமா?

புதுடில்லி, ஏப். 10

கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய நிர்வாக கமிட்டி நேற்று இங்கு கூடியபொழுது 12 பேர் வெளிநடப்பு செய்தனர்.

1924-ம் ஆண்டு கான்பூர் சதி வழக்கில் சம்பந்தப்பட்டு சிறையிலிருந்த திரு. டாங்கே தம்மை விடுதலை செய்தால் பிரிட்டிஷாருடன் ஒத்துழைப்பதாக எழுதிய கடிதம் சம்பந்தமாக நேற்று விவாதிக்கப்பட்டபொழுதுதான் இவர்கள் கூட்டத்திலிருந்து வெளியேறினர்கள்.

இக்கூட்டத்தில் பீக்கிங் ஆதரவாளர்களுக்கும் மாஸ்கோ ஆதரவாளர்களுக்கும் கருத்து வேற்றுமை ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. கூட்டத்திலிருந்து வெளியேறியவர்களில் சீன கம்யூனிஸ்ட் ஆதரவாளரும், இந்திய ராஜ்ய சபை அங்கத்தவருமான திரு. பூபேஷ் குப்தாவும் ஒருவரெனக் கூறப்படுகிறது. இந்திய கம்யூனிஸ்ட கட்சியின் காரியதரிசியான இவர் தமது பதவியையும் ராஜிநுமா செய்துவிட்டதாக அறியப்படுகிறது.

## டீன் ரஸ்க்

வாஷிங்டன், ஏப்ரல் 10

அமெரிக்க ராஜாங்க காரியதரிசி திரு. டீன் ரஸ்க் இன்று மணிலாவுக்குச்செல்கிறர். மணிலாவிலிருந்து அவர் சைகோனுக்கும் பின்னர் தைப்பேக்கும் விஜயம் செய்வார்.

## சந்திப்பு

வாஷிங்டன், ஏப்ரல் 10

ஜப்பானில் முன்னள் பிரதமர் திரு. ஒஹிடா நேற்று அமெரிக்க அதிபர் ஜோன்ஸனைச் சந்தித்தார். காலம் சென்ற அமெரிக்க தளபதி ஜெனரல் மக்கார்தருக்கு இறுதி அஞ்சலி செலுத்தும் பொருட்டு திரு. ஒஹிடா இங்கு வந்திருந்தார்.

# "தமிழ் போதனமொழியாக தொடர்ந்து இருக்கவேண்டும்"

## பாணந்துறைமுஸ்லிம் கல்விச்சபை யோசனை

கொழும்பு, வெள்ளி

அகில இலங்கை முஸ்லிம் சங்கங்களினல் ஒழுங்குசெய்யப்பட்ட அகில இலங்கை முஸ்லிம் கல்வி மகாநாட்டில் விவாதிப்பதற்காக அதிகமான பிரேரணைகள் கொண்டுவரப்பட்டுள்ளன.

பாணந்துறை முஸ்லிம் கல்வி சபையினல் அனுப்பப்பட்ட பிரேரணைதான் கடைசியாக கிடைத்துள்ள பிரேரணையாகும்.

இப் பிரேரணையில் சிங்களத்தில் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள் போதியளவு கிடைக்கும் வரையும் இஸ்லாமிய புத்தகங்கள் சிங்களத்தில் வெளிவரும்வரையும்முஸ்லிம்பாடசாலைகளில் தமிழ் தொடர்ந்து போதன மொழியாக இருக்க வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது.

1965-ம் ஆண்டு நடைபெறவிருக்கும் ஜி. சி. ஈ. உயர்தர பரீட்சைக்கு இஸ்லாமிய சமயத்தையும், சரித்திரத்தையும் மாணவர்கள் தங்கள் பாடங்களாக எடுக்க அனுமதிக்க வேண்டுமென்று மறுஒரு பிரேரணையில் கூறப்பட்டுள்ளது.

முஸ்லிம் மக்களுக்கு ஒரு முஸ்லிம் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்படவேண்டுமென்றும், கண்டி முஸ்லிம் பயிற்சிக்கலாசாலையை மீண்டும் திறக்கும்படியும் ஜனத்தொகை அடிப்படையின்படி, முஸ்லிம்கள் அரசாங்க சேவையிலும், தொழில் நுட்ப இலாகாக்களிலும் உத்தியோகம் பெற வழிசெய்யும்படியும் மற்றும் பிரேரணைகளில் கூறப்பட்டுள்ளது.

## அரசாங்கம் பொறுப்பேற்றது

ரங்கூன், ஏப். 10

பர்மாவில்; சகல கடைகள், வர்த்தக, வியாபார நிலையங்கள் ஆகியவற்றை பர்மா புரட்சி அரசாங்கம் நேற்று பொறுப்பேற்றது. இந்தக் கடைகளுக்கு நஷ்டஈடு அளிக்கும் பிரச்னைகளைக் கவனிக்கும் பொருட்டு கமிட்டியொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

## 'மக்களின் உயிரை சீன மதிக்கவில்லை'

### குருஷேவ் கண்டனம்

புடாபெஸ்ட், ஏப். 10

இங்கு நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில், கம்யூனிஸ்ட் சீனவை வன்மையாகக் கண்டித்த சோவியத் பிரதமர் திரு. குருஷ்சேவ், "கோடிக்கணக்கான மக்களின் வாழ்வுடன் சீன பொறுப்பற்ற முறையில் விளையாடுகிறது" என்று குறிப்பிட்டுள்ளார்.

ஹங்கேரியில் சுற்றுப்பிரயாணம் செய்துவரும் சோவியத் பிரதமர் திரு. குருஷ்சேவ் நேற்று புடாபெஸ்டில் ஒரு மாபெரும் பொதுக் கூட்டத்தில் உரை நிகழ்த்தினர்.

திரு. குருஷ்சேவ் தொடர்ந்து பேசுகையில், சீனவின் விபரீத போக்குகளினல் பல அபாயங்கள் ஏற்படலாமென்றும் இதைச் சமாளிக்க மற்றைய கம்யூனிஸ்ட் நாடுகள் தயாராக இருக்கவேண்டுமென்றும் கூறினர்.

"சீன இப்பொழுது புரட்சிப் பாதையைவிட்டு விலகி இன, மத, மாகாண ரீதியில் தனது கொள்கையை வகுத்துச் செல்கிறது. சீனவின் இந்த ஒருவழிக் கொள்கையினல் சீனவுக்கே பெரும் கேடு விளையலாம். சீனத் தலைவர்கள், மக்களின் உயிர்களை செல்லாக்காசாக மதிக்கிறர்கள். அணுயுத்தம் ஒன்று ஏற்பட்டால் உலகில் அரைவாசிபேர் தான் அழிவார்கள் என்ற சீனத் தலைவர்களின் தத்துவத்திலிருந்து கோடிக்கணக்கான மக்களின் உயிர்களை அவர்கள் எவ்விதம் நோக்குகிறர்கள் என்பது தெளிவாகப் புலனுகிறது" என்றும் திரு. குருஷ்சேவ் குறிப்பிட்டார்.

## "பிற்போக்குவாதிகள் தடை போடுகின்றனர்"

மாவனல்லை, வெள்ளி

"இந்த நாட்டு மக்களை சோஷலிஸப் பாதைக்கு அழைத்துச் செல்லும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முயற்சிக்கு, பத்திரிகைகளின் ஆதரவைப் பெற்றுள்ள சில பிற்போக்குவாதிகள் தடையாக இருக்கிறர்கள்" என்று தபால் உதவி மந்திரி திரு. ஜி. டபிள்யூ. சமரசிங்க, அனுதுவரையில நடைபெற்ற கூட்டத்தில பேசும்போது கூறினர்.

## சிறந்த சேவை அளிக்கப்படும்

கொழும்பு, வெள்ளி

புகையிரத பிரயாணிகளுக்கு சிறந்த சேவையளிக்கும் நோக்கமாக புகையிரத நேர அட்டவணை பரிசீலனை செய்யப்பட்டுள்ளது. புதிய அட்டவணையின்படி மேலதிகமாக 74 புகையிரதங்கள் சேவைக்கு விடப்படும்.

இலாகா தலைமை உத்தியோகத்தர்களுடன் ஆலோசனை செய்தபின் புகையிரத ஜெனரல் மனேஜர் திரு. பி. டி. ரம்பாலா புதிய அட்டவணையை ஏற்றுக்கொண்டார். புதிய அட்டவணையின்படி ஒரு பாதையில் ஒவ்வொரு 15 அல்லது 20 நிமிடங்களுக்குள் புகையிரதம் சேவைக்கு விடப்படும்.

## தூதுகோஷ்டி

நியுயோர்ச், ஏப். 10

ஏடனுக்கு உண்மை நிலை அறியும் தூதுகோஷ்டியொன்றை ஐக்கிய நாடுகள் சபை அனுப்பிவைக்கும்.


புத்தாண்டை பொலிவுடன் கொண்டாட

உங்களுக்கு வேண்டிய ஜவுளிகளை மலிவான விலையில் பெற்றுக்கொள்வதற்கு

சிறந்த ஸ்தாபனம்

சண்முகானந்தா ரெக்ஸ்ரைல்ஸ்

58, பெரியகடை, யாழ்ப்பாணம்.

வடபகுதி அசைஸ்

# எதிரியும் ஜூரியும் ஒரே அரசியல் கட்சியினர்

## அதனால் வழக்கு விசாரணை அடுத்த பருவத்துக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், சனி

ஒட்டிசுட்டான் கொலைவழக்கு நேற்றுக்காலை மூன்றாவது தினமாகத் தொடர்ந்து நீதியரசர் டாக்டர் ஏச். டபிள்யூ. தம்பையா கியூ. சி. முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டபோது, ஜூரிகள் சபைத்தலைவர் லங்கா சமசமாஜக் கட்சி அங்கத்தவராக இருந்திருக்கிறார் என்பதை முடிக்குரிய வழக்கறிஞர் திரு. ஏ. ஏ. டி. சில்வா நீதியரசரின் கவனத்திற்குக் கொண்டுவந்தார்.

எதிரி சார்பில் ஆஜராகிய வழக்கறிஞர் திரு. கே. வி. எஸ். சண்முகநாதன் ஏற்கெனவே ஒருமுறை பாராளுமன்றத் தேர்தலில் சமசமாஜக்கட்சி சார்பில் போட்டியிட்டாரென்றும், தொடர்ந்து அவர் சமசமாஜக்கட்சி அங்கத்தவராக இருந்துவருகிறார் என்றும் நீதியரசரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. இதைத் தொடர்ந்து, நீதியரசர் ஜூரிகள் சபையைக் கலைத்து அடுத்த பருவகால விசாரணைக்கு இவ்வழக்கை ஒத்திவைத்துள்ளார்.

ஜூரிசபைத் தலைவர், சமசமாஜக் கட்சிக் கிளைக்காரியதரிசியாக இருந்திருக்கிறார் என்றும் எதிரிசார்பில் ஆஜராகும் வழக்கறிஞர் திரு. கே. வி. எஸ். சண்முகநாதன் பாராளுமன்றத் தேர்தலில் சமசமாஜ கட்சி சார்பில் போட்டியிடதுமன்றி தொடர்ந்து அங்கத்தவராக இருக்கிறாரென்றும், ஆதலால் இவ்வழக்கை தொடர்ந்து விசாரணைசெய்வது நீதிபரிபாலனத்துக்கு ஏற்றதல்லவென்றும் இது நீதிக்கு அழகல்லவென்றும் இவ்வழக்கை ஒத்திவைக்கும்போது நீதியரசர் தெரிவித்தார்.

இவ்வழக்கில் 63-ம் ஆண்டு ஜூலை மாதம் 24-ம் திகதி வன்னியா பகுதியைச் சேர்ந்த ஒட்டிசுட்டானில் சோமசுந்தரம் சந்திரசேகரம் என்பவர் கே. சிதம்பரப்பிள்ளையை கத்தியால் குத்திக் கொலைசெய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

எதிரி சார்பில் வழக்கறிஞர் திரு கே. வி. எஸ். சண்முநாதன் திரு. எ. சொக்கலிங்கத்தின் அனுசரணையுடன் ஆஜரானார். எதிரிக்காக அரசாங்கத்தால் திரு. ரி. எஸ். ஆனந்தகுமாரசாமி நியமிக்கப்பட்டிருந்தார். முடிக்குரிய தரப்பில் திரு ஏ. ஏ. டி. சில்வா ஆஜரானார்.

அசைஸ் நீதிமன்றவிசாரணை 15-ம் திகதி புதன்கிழமை காலை 9-15 மணிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## பொமேர்ஸ் கழகம் வெற்றி

உடுப்பிட்டி, வெள்ளி

வதிரி பொமேர்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் மாதனை விளையாட்டுக்கழகத்திற்கும் இடையே மாதனை விளையாட்டுத் திடலில் நடைபெற்ற கரபந்தாட்டப் போட்டியில் பொமேர்ஸ் கழகம் வெற்றியீட்டியது.

இப்போட்டிக்கு மத்தியஸ்தராக திரு. மயில்வாகனம் கடமையாற்றினர்.

வல்வெட்டி குணசேகரா விளையாட்டுக்கழகத்தின் கரபந்தாட்ட சுற்றுப்போட்டியில் வதிரி பொமேர்ஸ் கழகத்திற்கும் நேதாஜி -'பி' கழகத்திற்குமிடையே நடைபெற்ற போட்டியில் முதல் இரு ஆட்டங்களையும் இலகுவில் சுவீகரித்துக் கொண்ட பொமேர்ஸ் கழகம் வெற்றியீட்டியது.

இப்போட்டிக்கு மத்தியஸ்தராக ஆசிரியர் திரு. யோகசாமி கடமையாற்றினர்.

## கி. ச. சங்க புதிய நிர்வாகிகள்

சுழிபுரம், வெள்ளி

சுழிபுரம் கிராம முன்னேற்றச் சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் சுழிபுரம் ஐக்கிய சங்க வித்தியாசாலையில் சங்கத் தலைவர் திரு. சு. கந்தசுவாமி தலைமையில் நடைபெற்றது.

புதுவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர்: சு. கந்தசுவாமி ஜே. பி., உபதலைவர்: சி. முருகேசு, காரியதரிசி: சி. மார்க்கண்டு, தனதிகாரி: ச. சிதம்பரப்பிள்ளை.

நிர்வாகசபை உறுப்பினர்:- மு. தம்பிஐயா, மு. தாமோதரம்பிள்ளை, மு. வேலு, அ. சின்னையா, ச. வைத்தியலிங்கம்.

வரிவசூல் ஊழியரை

# கடமை செய்யவிடாது தடுத்தவருக்கு ரூ. 150 அபராதம்!

காங்கேசன்துறை, வெள்ளி

காங்கேசன்துறை வரிவசூல் ஊழியர் இ. துரைராஜசுங்கம் என்பவரை கடமை செய்யவிடாது தடுத்தாரென்று, மாவிட்டபுரம் பணமுதலீடு கம்பெனி முதலாளி இராஜசிங்கம் இராசரத்தினம் என்பவர் மீது காங்கேசன்துறை பொலிஸாரால் தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் நீதிபதி திரு. ஜி எச். எம். அத்துறுபான முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. விசாரணையின் பின் நீதிபதி எதிரியை குற்றவாளியெனக் கண்டு ரூபா 150 அபராதம் விதித்து தீர்ப்பளித்தார். அபராதம் கட்டத்தவறினால், 9 மாத சிறைத்தண்டனையளிக்கப்படுமென்றும் நீதிபதி தெரிவித்தார்.

வழக்கறிஞர் திரு. அ. குமாரகுருவின் உதவியுடன் காங்கேசன்துறை பொலிஸார் வழக்கை நடத்தினர்கள். எதிரி சார்பில் திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜரானார்.

எதிரி சார்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் பட்டினசபை தலைவர் வழங்கிய அதிகாரம் சட்டப்படி செல்லுபடியாகாதென்றும் செல்லுபடியாகாத அதிகாரத்தை உபயோகிக்க முயன்ற ஊழியரை தடுத்ததும் தாக்கியதும் முறையானதென்றும் வாதாடினர்.

பட்டினசபை தலைவர் வழங்கிய அதிகாரம் நூற்றுக்கு நூறு வீதம் சட்டபூர்வமானதென்றும், இத்தகைய அதிகாரத்தையளிக்க பட்டினசபை சட்டப்பிரிவின் கீழ் பூரண அதிகாரங்கள் உண்டென்றும் வழக்காளி தரப்பு வழக்கறிஞர் திரு. அ. குமாரகுரு எடுத்துக் கூறினர்.

இவ்வழக்கில் காங்கேசன்துறை பட்டினசபை தலைவர் திரு. மு. திடவீரசிங்கமும் சாட்சியமளித்தார்.

# ஆசிய-ஆபிரிக்க ஆயத்த மகாநாடு

ஜகார்த்தா, ஏப். 10

இரண்டாவது ஆசிய-ஆபிரிக்க மகாநாட்டின் ஆயத்த மகாநாடு இன்று ஜாகர்த்தாவில் ஆரம்பமானது.

இம் மகாநாட்டில் கலந்து கொள்ளும் இலங்கைத் தூதுகோஷ்டியில்; வெளிவிவகார அமைச்சின் பொதுக் காரியதரிசி திரு. ஜி. எஸ் பீரிஸ், இந்தியாவிலுள்ள இலங்கை ஸ்தானிகர் திரு. ஷேர்லி அமரசிங்கா, இந்தோனேஷியாவிலுள்ள இலங்கை அதிகாரி திரு. ஜி. வி. ராஜபக்ஷ ஆகியோர் உள்ளனர்.

ஆசிய-ஆபிரிக்க உச்சி மகாநாடு கெய்ரோவில் நடைபெறலாம் என்று இந்தோனேஷிய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. நடு நிலைமை நாடுகளின் இரண்டாவது உச்சி மகாநாடும் கெய்ரோவில் நடைபெறுகிறதென்பது வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம்.




# வானொலி நிகழ்ச்சிகள்

## கொழும்பு

### சனி 11-4-64

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கத்தோலிக்கநற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 மாணவர் மன்றம், 5-45 திரை இசை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை' 6-45 கண்டதும் கேட்டதும் — செய்திச்சுருள், 7-00 கே. கே. அந்தோனி — பாட்டு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 பேச்சு நெடுநல்வாடை — கே. மயில்வாகனம், 9-30 ஆர். முத்துசாமி — வயலின்.

### ஞாயிறு 12-4-64

காலை 6-45 பாமாலை, 6-55 கத்தோலிக்க நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 மெல்லிசை, 8-00 பௌத்தவாசம், 8-15 தமிழ் மூலம் சிங்களம், 8-30 ஞானாஞ்சலி, 9-00 முஸ்லிம் ஞாயிறுபாடசாலை, 11-30 சிறுவர் மலர்.

பகல் 12-15 நேயர் விருப்பம், 1-00 மாதர் நிகழ்ச்சி.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 என். கந்தசாமி பாட்டு, 5-45 திரை இசை

இரவு 6-15 தாளவாத்தியக் கச்சேரி, 6-45 ஆர். மனோன்மணி பாட்டு, 7-15 வீணை, 7-45 நாடகம் 'சாந்தி'—சே. அருளானந்தம் எழுதியது, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 மாதர் விருப்பம், 9-45 தேர்ந்த இசை, 10-00 நிலைய ஒலிப்பதிவுகள்.

## திருச்சி

### சனி 11-4-64

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-30 மங்கள இசை, 6-50 வாத்திய இசை, 6-55 அருள்வாக்கு, 7-00 துதிப் பாடல்கள், 7-30 இசைக் கோவை.

பகல் 1-00 பிள்ளைக்கனி அமுது, 1-20 கதம்பம், 1-50 வாத்திய இசை, 2-10 எச். எஸ். மத்வாச்சார் — கோட்டு வாத்தியம்.

மாலை 5-15 திரைப்பட இசை.

இரவு 6-20 கிராமநிகழ்ச்சிகள், 7-30 குற்றவாளி — குஜராத்திக்கதையின் நாடக வடிவம், 8-40 தேசபக்திப்பாடல்கள், 9-15 இசைமாலை, 9-30 அகிலபாரத சங்கீதநிகழ்ச்சி.

### ஞாயிறு 2-4-64

காலை 6-30 மங்கள இசை, 6-50 வாத்திய இசை, 6-55 அருள்வாக்கு, 7-00 துதிப் பாடல்கள், 7-30 திருச்சி கே. பட்டம்மாள் — பாட்டு, 8-15 டி. கே. ஜயராமன் — பாட்டு.

பகல் 12-00 நீங்கள் கேட்டவை, 12-30 சூரியகாந்தி: கீதம்பநிகழ்ச்சி, 1-00 மணிமலர், 1-50 வாத்திய இசை, 2-10 பெண்ணுலகம், 3-00 டி. ஆர். கிருஷ்ணமாச்சாரி — வீணை.

மாலை 5-15 திருச்சி கே. பட்டம்மாள் — பாட்டு.

இரவு 6-20 கிராமநிகழ்ச்சிகள், 7-30 ஜனநாயகம் வெற்றி பெற நீதியும் நிர்வாகமும் — பி. பி. கே. ராஜா — பேச்சு, 7-45 ஷேக்ஸ்பியர் — விசேஷ நிகழ்ச்சி, 8-15 கிளாரினெட், 9-15 தேசபக்திப் பாடல்கள், 9-45 அஹிமஹி ராவணன் — சங்கீத உபன்யாசம். நிகழ்த்துபவர் — என். எஸ். கிருஷ்ண பாகவதர்.






## அறிவித்தல்

29-3-64 ல் பரகதியடைந்த எமது தாயார் வேலணை மேற்கு முருகேசபிள்ளை சாஸ்திரியார் அவர்களின் மனைவி திருமதி முத்தாச்சிப்பிள்ளையின் பிரிவைக் குறித்து அனுதாபச் செய்தியனுப்பிய அன்பர்களுக்கும் 30-3-64 ல் வீட்டிலும் மயானத்திலும் நடைபெற்ற இறுதிச் சடங்குகளின்போது சமுகந்தந்து கடமைபுரிந்த ஆண், பெண் இருபாலார் யாவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

இன்னும் தொடர்ந்து 18-4-64ல் அன்று காலை 6 மணி தொடக்கம் நடைபெறும் பாடாண உத்தியாபனம், சபிண்டீகரணம் ஆகிய கிரியைகளின் போது அன்பர்கள், உறவினர்கள் யாவரையும் சமுகந்தருமாறு வேண்டுகிறோம்.

மீனும்பா முருகேசபிள்ளை சாஸ்திரியார், மணிபுரம், வேலணை மேற்கு. 228

## நன்றி நவிலல்

இரத்தின சபாபதி - விஜய இந்திரன், ராஜஇந்திரன் (ஐக்கியநாடுகள், அமெரிக்கா), மஹா இந்திரன் (புரக்டர்), பூரண இந்திரன், மங்கையர்க்கரசி கந்தையா, இந்திராணி பத்மநாதன், இந்திராணி மஹா இந்திரன், சரவணமுத்து கந்தையா மற்றும் கணபதிப்பிள்ளை பத்மநாதன் (அப்புக்காத்து) ஆகியோர் தமது அன்புமிக்க தந்தை யாழ்ப்பாணம் புரக்டரும் நொத்தாரிசுமான காலஞ்சென்ற திரு. ஐயம்பிள்ளை அம்பலவாணர் இரத்தின சபாபதி அவர்களின் மரணச் சடங்கின் போது விஜயம் செய்தும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும் உதவி செய்தவர்கட்கு தமது உளம் நெகிழ்ந்த ஆழ்ந்த நன்றியறிதலை அவர்களது எல்லாச் சிநேகிதர்களுக்கும் உற்றார் உறவினர்களுக்கும் சமர்ப்பிக்கின்றனர். 'இந்திர வாசா' ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 231

## இனம் 150 ரூபாய்

அளவெட்டி தெற்கே, ஒரு பையன் காணமற் போய்விட்டார், தற்போது ஒரு மாதம் ஆகிறது. வாய்பேசமுடியாது. பேசுவது விளங்கும். பெயர் செல்வராஜ். நிறம் சிவப்பு. வயது 13. உயரம் 4 அடி. இவரைப் பற்றிய தகவல் கிட்டிய பொலிஸ் நிலையத்திற்கு அல்லது சொந்தக்காரருக்கு தெரிவித்தால் ரூபா 150 இனமாக கொடுக்கப்படும்.

M. P. போல்ராஜ், 54, பேங்சால் வீதி, கொழும்பு 11.

## கி. ச. தேர்தல் முடிவுகள்

நல்லூர், வெள்ளி

சமீபத்தில் நடைபெற்ற இரணைதீவு கிராமசபைத் தேர்தலில் 6-ம் வட்டாரத்தில் திரு. வை. மோசஸ் வெற்றி பெற்றுள்ளார். ஏனைய 5 வட்டாரங்களிலும் அங்கத்தவர்கள் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

### துணுக்காய்

துணுக்காய் கிராம சபைத் தேர்தலில் வெற்றியீட்டியவர்கள் விபரம் வருமாறு:-

2-ம் வட்டாரம்: ஐ. ஐயாத்துரை, 4 ம் வட்டாரம்: திரு. இராமநாதர் மூத்து, 5-ம் வட்டாரம்: திரு. ஜே. சபாரத்தினம், 6-ம் வட்டாரம்: திரு. சின்னத்துரை, 1, 3 ம் வட்டாரங்களில் போட்டியின்றி அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## வரி விளம்பரம்

**IMPORTANT ANNOUNCEMENT**

SECRETARIAL AND ACCOUNTANCY TUTORY

An Institute in Jaffna provides lectures for Examination for December, 1964, for Cost and Works Accountants and Chartered Secretaries commencing from May. Lectures and Tuition by Chartered Accountant, Chartered Secretary, Master of Arts, Bachelor of Laws and Bachelors of Commerce

For particulars apply 1st Floor, Kumaraswamy Buildings, (Opposite Bus Stand). Power House Road, Jaffna. 210

**RENT**

Upstair Large room available - water, drainage and allconveniences. ApplyGnaneswaran, 1st Floor, Kumaraswamy Buildings (Opposite Bus stand), Grand Bazaar, Jaffna. 212

**தொய்வு, நீரிழிவு**

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றோரைக் இனம். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50 வைத்தியர் பரிபூரணாநந்த கைலாயபிள்ளையார் கோவடி யாழ்ப்பாணம்.

**வீடு விற்பனை**

சாவகச்சேரி பட்டினத்தில் மத்தியான இடத்தில் இருக்கும் வீடும் வளவும். ச. ஸ்ரீநிவாசன், உடுவில். 229

**அரைச்சலார்**

அநேக மக்களின் ஆதரவு பெற்ற சுன்னாகம் "பிறின்ஸ்" புகைப்பட ஸ்தாபனத்தார் 10-வது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு 25-4-64 வரை அரைச்சலார். 62

**றேடியோ**

வாங்கவோ, விற்கவோ பழுதுபார்க்கவோ, சிறந்த இடம்.

S. சுலைமான்கண்டு & பிரதர், காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 55

**தேவை**

பொம்மைகட்கு வர்ணம் பூசுதற்கும் செய்தற்கும் அனுபவம் பெற்றவர்கள் தேவை. இரு பாலாரும் விண்ணப்பிக்கவும். முடிவு திகதி 25-4-64. ச மகிந்தராசா, கோட்டடி, கிறிஸ்தவ தேவாலயவீதி, சாவகச்சேரி. 232

**விற்பனைக்கு**

நல்ல இனத்து ஆட்டுக் கடாக்கள் விற்பனைக்கு உண்டு. தி. முருகேசு, தபாற்கந்தோர் முகப்பு, தெல்லிப்பளை. 230


ரீகல் (யாழ்ப்பாணம்)

REGAL — JAFFNA

NOW SHOWING

Daily at 4-45, 7-00 & 9-45 p. m

Morning Shows

Sats. & Suns. at 10-30 a. m.

○ Tony Curtis

○ James Francisus

in

Universal International's

THE OUTSIDER

3வது மகத்தான புகழ் வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ கிருஷ்ணா (திருகோணமலை) விஜிதா (ஹட்டன்)

மொடேர்ன் (பதுளை) மொடேர்ன் (பண்டாரவளை) கல்யாணி (நாவலப்பிட்டி)!



எம். ஜி. ராமச்சந்திரன்—பி. சரோஜாதேவி

எம். ஆர் ராதா—டி. ஆர். ராஜகுமாரி

மற்றும் பலர் நடித்த

பெரிய இடத்துப் பெண்

## கூட்டுச்சேர்வுக்கு பாலதம்பு எதிர்ப்பு

கொழும்பு, வெள்ளி

"தொழிலாளர் வகுப்பினரின் முன்னேற்றப் பாதையை, காட்டிக்கொடுப்பவர்கள் எவரும் தடுத்துவிட முடியாது. தொழிலாளர் வகுப்பினரான நாங்கள், முதலாளித்துவ அரசாங்கம் எதனுடனும் சேர்ந்து பதவி எதையும் பெறவிரும்பவில்லை. நாங்கள் போராடியிருக்கின்றோம் பல 'பாடங்களை' படித்திருக்கின்றோம். அதனுடன் மட்டுமன்றி எங்களை எவரும் வெற்றி காண முடியாது என்பதை பரீட்சித்து நிரூபித்தும் காட்டியுள்ளோம்!"

நேற்று புதிய நகரமண்டபத்தில் தொழிற் சங்கத்தலைவர் திரு. பாலதம்பு, "கூட்டரசாங்கம்-எவரின் நலனுக்காக" என்பதுபற்றி உரை நிகழ்த்துகையில் மேற்கண்டவாறு கூறினர்.

"கூட்டரசாங்கமொன்றை ஏற்படுத்துவதற்கு, இடதுசாரி ஐக்கிய முன்னணியை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அழைத்திருப்பது ஒரு ஏமாற்றுவித்தையே. வேறு எந்தச் சக்தியிலும் பார்க்க தொழிலாள வகுப்பினருக்கு போதிய வல்லமை உண்டு" என்றும் திரு. பாலதம்பு கூறினர்.

## பீடித் தொழிலாளர் கூட்டம்

யாழ்ப்பாணம், சனி

"பீடித் தொழிலாளர்களை எதிர் நோக்கியுள்ள பல பிரச்னைகளுக்கும் தீர்வுகாண முயற்சிக்கவேண்டும். தொழிற் சட்டங்களை அமுல் நடத்துவதற்கு பீடித் தொழிலுக்கு உடனடியாக தொழிற்சாலை முறையை அரசாங்கம் ஏற்படுத்தவேண்டும்" என்று இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்தின் யாழ்ப்பாணப் பிரதிநிதி திரு. இ. பொன்னையா வடமாகாண ஐக்கிய பீடித் தொழிலாளர்கள் கூட்டத்தல் பேசுகையில் கூறினர்.

சம்மேளனத்தின் கிளைக்காரியாலயத்தில் இக்கூட்டம் நடைபெற்றது.

ஆர். வி. ஜி. பீடிக் கம்பெனி செல்வம் பீடிக் கம்பெனி, சிலோன் பீடிக்கம்பெனி, மூல்லா பீடிக் கம்பெனி ஆகிய நான்கு பீடிக் கம்பெனித் தொழிலாளர்களும் தொழிற் சங்கம் அமைத்து இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத்துடன் இணைந்துள்ளார்கள்.

வடமாகாண ஐக்கிய பீடித் தொழிலாளர் சங்கத்தின் நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர்: திரு. எஸ். பி. மூர்த்தி; உபதலைவர்: ஜனுப் பி. எம். பாட்சா; செயலாளர்: திரு. கே. ஆர். பழனியாண்டி; பொருளாளர்: ஜனுப ஏ. எம். உமர்தீன்; நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

## சங்க கூட்டம்

மாதகல, வெள்ளி

மாதகல் விக்னேஸ்வரா வித்தியாசாலை பெற்றூர்-ஆசிரிய சங்க கூட்டம் அண்மையில் வித்தியாசாலை அதிபர் திரு. வெ. கந்தையா தலைமையில் நடைபெற்றது. பலர் உரை நிகழ்த்தினர்.

## மைத்திரிபால

கொழும்பு, வெள்ளி

ஜெநிவாவில் நடைபெற்ற உலக வர்த்தக மகாநாட்டில் கலந்துகொண்ட இலங்கைப் பிரதிநிதிகள் கோஷ்டிக்குத் தலைமை வகித்துச் சென்ற திரு. மைத்திரிபாலசேனநாயக்கா நேற்றிரவு கொழும்பு வந்து சேர்ந்தார். அவரை ஏற்றி வந்த "ஏர்சிலோன்" விமானம் நேற்றிரவு 10 மணிக்குதான் கட்டுநாயக்கா விமான நிலையம் வந்தடைந்தது.

## 45-வது சுதேசி தின கொண்டாட்ட விழா

யாழ்ப்பாணம், சனி

அரியாலையின் 45-வது சுதேசிய தினக் கொண்டாட்டவிழா வருடப்பிறப்பன்று கொண்டாடப்படவிருக்கிறது. இவ்விழாவையொட்டி பல கலைப்போட்டிகளும் கிரிக்கெட், உதைபந்தாட்டம், கைப்பந்தாட்டம், தாச்சி ஆகிய விளையாட்டுச் சுற்றுப் போட்டிகளும் ஏற்கனவே நடைபெற்றன. காலை 10-00 மணியளவில் 5 மைல் ஓட்டப்போட்டியும், மறுநாள் சைக்கின் மரதன் ஓட்டப் போட்டியும் நடைபெறும்.

அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் புதுவருடதினத்தன்று 8-00 மணி தொடக்கம் ஓட்டப் போட்டிகள் நடைபெறும். அன்று முக்கிய நிகழ்ச்சிகளாக விநோத உடைப்போட்டி, கழுமரம் ஏறுதல் ஆகிய போட்டிகளும் நடைபெறும்.

விழாவை முன்னிட்டு அரியாலை ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில் முன்றலில் அரியாலை நாடக மன்றம் அளிக்கும் "கர்ணன்" என்னும் சரித்திர நாடகம் இடம் பெறும். இந்த நாடகத்தில் அரியாலையின் சிறந்த நடிகர்கள் பங்குபற்றுவார்கள்.

அரியாலை 45-வது சுதேசிய தினக்கொண்டாட்ட விழாத் தலைவர் திரு. கா. ச. நடராசா ஜே. பி. நாடகத்திற்குத் தலைமை தாங்குவார்.

## தமிழர் பிரச்னை . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரச்னை தீர்க்கப்படுமென எதிர்பார்க்கிறோம்.

**கேள்வி:** மொழிப் பேச்சுவார்த்தை பயனளிக்காவிட்டால் மீண்டும் நேரடி நடவடிக்கை எடுக்கப்படுமா?

**பதில்:** இதுபற்றி இன்னும் முடிவுசெய்யவில்லை.

**கேள்வி:** சுதந்திரக் கட்சியும் ஐக்கிய இடதுசாரி முன்னணியும் சேர்ந்து கூட்டரசாங்கம் அமைத்தால் மொழிப்பிரச்னை தீர்க்கப்படுமா?

**பதில்:** மொழிப் பிரச்னையை தீர்ப்பதில் அவர்கள் அக்கறை கொண்டுள்ளார்கள் என்று அறிகிறேன்.

**கேள்வி:** ஜூன் 5-ம் திகதிக்கு முன் மொழிப்பேச்சுவார்த்தை நடைபெறாவிட்டால் மீண்டும் நேரடி நடவடிக்கையில் இறங்கும்படி தமிழரசுக் கட்சி வாலிப முன்னணி தெரிவித்துள்ளது. இது பற்றி என்ன கூறுகிறீர்கள்?

**பதில்:** இவ்விஷயம் பற்றி எனக்கு இன்னும் அறிவிக்கப்படவில்லை.

## மொழிப்பிரச் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ராஜா தமிழ்மொழியில்தான் அனுப்புவதென்று தெரிவித்தார்.

முன்னறிவித்தபடி திரு. த. கந்தையாவால் பிரேரிக்கப்பட்டு திரு. ராஜசூரியாவால் அனுவதிக்கப்பட்ட ஒரு பிரேரணை சம்பந்தமாகவே மேற்கூறிய முடிவு எடுக்கப்பட்டது

"தமிழ்பேசும் பகுதிகளின் நிர்வாகமொழி எது என்பதை யிட்டு திட்டவட்டமான இறுதி முடிவு செய்யப்படாமையால் இப் பகுதிகளில் அரசாங்க நிர்வாகமும், அங்கு வாழ்ந்து வரக்கூடிய மக்களின் நல்லெண்ணமும் சீரழிந்துவருகிறது. ஆகவே மத்திய அரசாங்கமும் தமிழ்பேசும் மக்களின் தலைகர்களும் தமிழ்பேசும் பகுதிகளின் நிர்வாக மொழி எது என்ற பிரச்னைக்கு மேலும் காலதாமதம் செய்யாது விரைவில் ஓர் தீர்வுகாணவேண்டுமென்றும், நாட்டில் நல்லெண்ணமும், இன ஒற்றுமையும் ஏற்பட வழிவகுக்கவேண்டுமென்றும், கௌரவ பிரதம மந்திரியையும், தமிழ்த் தலைவர்களையும் கோருவது" என திரு. கந்தையாவால் கொண்டுவரப்பட்ட பிரேரணையில் கூறப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணத்தில்

# புதுவருடத்தை முன்னிட்டு உதைபந்தாட்டப் போட்டிகள்

## வெளியூரிலிருந்து மூன்று கோஷ்டிகள் இங்கு வருகின்றன

யாழ்ப்பாணம், சனி

புதுவருட தினத்தை முன்னிட்டு வெளியூர்களிலிருந்து 3 உதைபந்தாட்டக் கோஷ்டிகள் இங்கு விஜயம் செய்யவிருக்கின்றன. கொழும்புசன்னி மவுண்ட் கிளப், பல்கலைக் கழக கொழும்பு பிரிவு உதைபந்தாட்டக் கோஷ்டி நீர்கொழும்பு இளைஞர் உதைபந்தாட்டக் கோஷ்டி ஆகிய 3 கோஷ்டிகள் சனி, ஞாயிறு, திங்கட்கிழமைகளில் யாழ்ப்பாணத்தில் உள்ள பலம் பொருந்திய கோஷ்டிகளுடன் மோதவிருக்கின்றன.

போட்டி விபரங்கள் வருமாறு:-

**சனி 3-45:** புனிதவளன்-பல்கலைக்கழகம். 4-45: சென். அந்தோனிஸ்-சன்னி மவுண்ட். (மத்திய கல்லூரி மைதானம்)

**ஞாயிறு 3-45:** வல்வெட்டித்துறை புளூஸ்-நீர்கொழும்பு யுத் உதைபந்தாட்டக்கிளப். (வல்வெட்டித்துறையில்) 4-45 அரியாலை யுனைட்டெட் கிளப்-இலங்கைப் பல்கலைக் கழகம், (மத்திய கல்லூரி மைதானம்)

**திங்கள்: 4-45;** சென். அந்தோனிஸ்-நீர்கொழும்பு, யுத் கிளப். (மத்திய கல்லூரி மைதானம்).

யாழ்ப்பாணத்துக் கோஷ்டிகளில் ஒவ்வொன்றிலும் யாழ். மாவட்டக் கோஷ்டியில் பங்குபற்றும் பலர் ஆடுவார்கள்.

புனிதவளன் கோஷ்டிக்குத் தலைமை தாங்கும் அந்தோனிப்பிள்ளையுடன் தாசீயஸ், சூசைப்பிள்ளை என்பவர்கள் பிரபல ஆட்டக்காரர்கள்.

அரியாலை யுனைட்டெட் கிளப்புக்குத் தலைவர் பரமலிங்கத்துடன் அவரது சகோதரர்களாகிய மகாலிங்கம் சண்முகலிங்கமும், மற்றும் தவநாதன் சண்முகநாதன், சண்முகசுந்தரம் ஆகியோரின் ஆட்டம் கவர்ச்சியுடையதாக இருக்கும்.

வல்வெட்டித்துறை புளூஸ் கோஷ்டியின் தருமரத்தினத்துக்கு உதவியாக மயிலேறும் பெருமாள், யோகசந்திரன், கார்த்திகேயன் முதலியோர் திறமையான ஆட்டக்காரர்கள்.

சென். அந்தோனிஸ் கோஷ்டி மிகவும் திறமையாக ஆடுவார்களென எதிர்பார்க்கப்படுகிறது. சென்ற வருடத்தில் சாம்பியன் இடத்தைப் பெற்றுள்ள இக்கோஷ்டிக்கு யாழ்ப்பாணத்துக் கோஷ்டியின் தலைவர் அல்போன்ஸ் கோல்களை அடிப்பதில் மிகவும் திறமை வாய்ந்தவர். இக்கோஷ்டியில் கோல்காப்பாளராக குணளூம், மற்றும் மரியநாயகம், மத்தையாஸ், அன்ரனி ஜோர்ஜ் என்பவர்கள் திறம்பட ஆடுவார்கள். மூன்று நாட்களிலும் இவ்வாட்டங்களை பார்ப்பதற்கு அநேகம் ரசிகர்கள் கூடுவார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

## பசுக்களை . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பார்களென நம்புகிறேன். முஸ்லிம், கிறிஸ்தவர்களும் இதனை எதிர்க்க வேண்டும்.

**மேயர்:** தமிழ் மக்கள் எல்லோரும் எதிர்ப்பார்கள்.

**தெய்வேந்திரம்:** மாடுகளை வெட்டுவது எனது வட்டாரத்தில் தான் நடைபெறுகிறது. ஆதலால் சபை அனுமதித்தாலும் நான் பசுமாடுகளை வெட்டுவதை ஒருபோதும் அனுமதியேன்.

**துரைராஜசிங்கம்:** பசுவை நாங்கள் தெய்வமாகக் கருதுகிறோம். பசுவை வெட்டுவது கடவுளை வெட்டுவதற்குச் சமம். ஆதலால் இதை முழுமூச்சாக எதிர்க்க வேண்டும்.

வெள்ளிக்கிழமைகளில் இறைச்சி வெட்டப்படுவதில்லை, ஏனெனில் ஒரு மதத்தினருக்கு மரியாதை கொடுக்கும் விதத்தில் அப்படி நடக்கிறது. ஆதலால் பசுமாடு வெட்டப்படுவதை எல்லோரும் எதிர்க்க வேண்டும்.

**ராஜசூரியர்:** பசுமாடுகள் கள்ளமாக வெட்டப்படுவதையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**மேயர்:** அப்படி நடக்கவில்லை.

**தெய்வேந்திரம்:** பசுமாடுகள் கள்ளத்தனமாக வெட்டப்படுவதாகப் புகார் செய்யப்படவில்லை.

பசுவை இறைச்சிக்கு வெட்ட அனுமதிப்பதில்லையெனவும், களளத்தனமாக வெட்டுவோரின் லைசென்சுகளை ரத்துச் செய்வதெனவும் இறுதியில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

## உடுப்பிட்டி எம். பி. தமிழ்நாடு பயணம்

பருத்தித்துறை, வெள்ளி

உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் இன்று பிற்பகல் தமது குடும்பத்தினருடன் தென்னிந்தியாவுக்குப் பயணமானர். விமானத்தில் சென்ற அவர் தமிழ்நாட்டில் முக்கிய ஸ்தலங்களுக்குச் சென்று தரிசனம் செய்வதுடன் தமிழறிஞர் பலரையும் சந்திப்பாரெனத் தெரிகிறது.

## வட்டுக்கோட்டை எம். பி. அறிவிப்பு

யாழ்ப்பாணம், சனி

சமீபத்தில் நடைபெற்ற தமிழரசு வாலிபமுன்னணியின் வருடாந்த மகாநாட்டை அடுத்தமாதம் கிளிநொச்சியில் நடத்துவதென்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்ட சமயத்தில் மட்டுமே பார்வையாளராகத் தாம் கலந்துகொண்டதாகவும், தமிழரசுக்கட்சி எம். பி.க்கள் இருவர்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென வாலிப முன்னணியின் செயர்குழு தீர்மானித்த சமயத்தில் தாம் அங்கிருக்கவில்லையென்றும் வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் அறிவித்துள்ளார்.

கூட்டத்தில் 6 மணிவரையுமே தாம் இருந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்

## விசேஷ புகையிரதங்கள்

கொழும்பு, வெள்ளி

சிங்கள, தமிழ் புதுவருட தினத்தையொட்டி புகையிரதப் பகுதியினர் நாட்டின் பலபகுதிகளிலும் விசேஷ புகையிரதங்களை சேவைக்கு விட்டுள்ளனர். நீண்டதூர புகையிரதங்களுடன் பிரயாணிகளின் வசதிக்காக அதிக பெட்டிகள் இணைக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்புக்கும் காங்கேசன் துறைக்குமிடையில் விசேஷ புகையிரதமொன்று சேவைக்கு விடப்படும். 11-ந் திகதி இரவு 9-15-க்கு கொழும்பு கோட்டையிலிருந்து புறப்படும் விசேஷ புகையிரதம் 12-ம் திகதி காலை 6-45 மணிக்கு காங்கேசன் துறையை வந்தடையும். இப்புகையிரதம் பொல்காவலை, மாகோ, கல்கமுவ, அநுராதபுரம், வவனியா, மாங்குளம், கிளிநொச்சி, பரந்தன், பளை, கொடிகாமம், சாவகச்சேரி, நாவற்குழி, யாழ்ப்பாணம், கோண்டாவில், சுன்னாகம் ஆகிய புகையிரத நிலயங்களில் மட்டும் நிறுத்தப்படும்.

## ஆசிரியருக்கு பாராட்டு

பருத்தித்துறை, சனி

புலோலி மெதடிஸ்த தமிழ்க் கலவன் பாடசாலையில் தொடர்ந்து 23 ஆண்டுகள் தலைமை ஆசிரியராக இருந்து தமது 41 வருட ஆசிரிய சேவையினின்றும் இளைப்பாறும் தலைமை ஆசிரியர் திரு. ஜோ. மு. ஆழ்வாப்பிள்ளைக்கு இன்று பாராட்டு விழா நடைபெறவிருக்கின்றது.

புலோலி கிராமசபையின் தலைவர் திரு. செ. மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் திரு. க. ச. அருள்நந்தி பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பார்.

பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம், வட்டாரப் பரிசோதகர் திரு. வி. தர்மசங்கரி, மாற்றச்சபைத் தலைவர் திரு. வே. நடராசா, ஆசிரியகலாசாலை அதிபர் திரு. சி. கந்தசாமி ஆகியோர் பாராட்டுரைகள் வழங்குவார்கள் எனவும் அறிவிக்கப்படுகிறது.

பூட்டான் பிரதமர்கொலை

## சந்தேக நபரிடம் துப்பாக்கி இருந்தது

காங்டொக், ஏப். 10

பூட்டான் பிரதமர் திரு ஜிக்மி டோர்ஜியைக் கொலை செய்ததாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட தாசென்னிடம் இரண்டு கைத்துப்பாக்கிகளும் இரண்டு கைக்குண்டுகளுமிருக்கக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

பூட்டானைச் சேர்ந்தவரெனக் கூறப்படும் இவரைப் பொலிஸார் கைது செய்தபொழுது அவரிடம் 5,000 ரூபா இருந்ததாம்.

தாசென்மீது ஓரிரு தினங்களில் கொலைக் குற்றச் சாட்டுகள் தாக்கல் செய்யப்பட்டு வழக்குத் தொடரப்படவிருக்கிறது.

## அத்தியடி விநாயகர் ஆலய மகோற்சவம்

யாழ்ப்பாணம், சனி

இம்மாதம் 23-ம் திகதி முதலாகக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றுவரும் அத்தியடி சிதம்பர நடராச வீரகத்தி விநாயகர் ஆலய உற்சவம் குரோதி புதுவருடப்பிறப்பன்று தேர்த் திருவிழாவுடன் முற்றுப்பெறும். கொடியேற்றம் தவிர்ந்த ஏழு நாட்களிலும் தினந்தோறும் பிற்பகல் 7 மணிமுதல் 9 மணிவரை ஆசிரியர் திருப்பூங்குடி வி. க. ஆறுமுகம் சங்கீத கதாகாலாட்சேபம் நடத்திவருகிறார்.

## கூட்டுறவு மகாநாட்டில் இலங்கை பங்குபற்றும்

கொழும்பு, வெள்ளி

ஜப்பானில் இம்மாதம் 19-ம் திகதி நடைபெறவிருக்கும் கூட்டுறவு மகாநாட்டில் இலங்கையும் பங்குபற்றவிருக்கிறது.

இம்மாதம் 26-ம் திகதிவரை நடைபெறும் இம் மகாநாட்டை சர்வதேச கூட்டுறவு மன்றம் ஏற்பாடு செய்துள்ளது.

## சேவைநலம் பாராட்டு

ஊர்காவற்றுறை, வெள்ளி

புங்குடுதீவு ஸ்ரீ கணேச வித்தியாசாலையில் கடந்த முப்பது ஆண்டுகளுக்குமேலாக தொடர்ந்து தலைமையாசிரியராய்க் கடமையாற்றி ஓய்வுபெற்ற திரு. க. செல்வத்துரைக்கு சேவை நலம் பாராட்டு விழா ஒன்று நடைபெற்றது.

பொதுமக்கள் ஆதரவில் தீவுப்பகுதி எம். பி. திரு. வ. நவரத்தினம் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் உபசாரப்பத்திரம் வாசித்து அளிக்கப்பட்டது தீவுப்பகுதியின் முன்னாள் காரியாதிகாரி திரு. செ. சிவஞானம், பேராசிரியர் திரு. சதாசிவம் ஆகியோர் கூட்டத்தில் பேசினர்கள்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.